# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2020.01.13 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## காணி அபிவிருத்தி (திருத்தம்)

(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 464) ஐ திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**காணி அபிவிருத்தி (திருத்தம்)**

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 464) ஐ திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

***1.*** இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என குறிப்பிடப்படலாம். *சுருக்கப்பெயர்.*

***2.*** முதன்மைச் சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 1(ஆ) மற்றும் 2 ஆம் விதிகள் பின்வரும் விதிகளினால் மாற்றீடு செய்யப்படுகின்றன :- *464 ஆம் அத்தியாயத்தின் மூன்றாம் அட்டவணையின் திருத்தம்.*

"1 (ஆ) பிரிவு 72 இன் நோக்கங்களுக்கென காணி உரித்தை வைத்திருப்பதற்கான அதிகாரமானது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் அல்லது உரிமையாளரின் உறவினர்களின் முன்னுரிமை வரிசையில் இதன் கீழுள்ள அட்டவணையில் முறையே குறிப்பிடப்பட்டுள்ளது. எந்தவொரு குழுவிலும் ஒன்றுக்கு மேற்பட்ட உறவினர்கள் இருந்தால் இளையவரை விட மூத்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்:

ஆயின், மூத்தவரைத் தவிர வேறு ஒருவரால் ஒரு நிலம் அபிவிருத்தி செய்யப்படும்போது இந்த விதிமுறையில் எதுவும் மூத்தவருக்கு முன்னுரிமை அளிக்கக்கூடாது.

### அட்டவணை

(i) பிள்ளைகள்

(ii) பேரப்பிள்ளைகள்

(iii) பெற்றோர்கள்

(iv) உடன்பிறந்தவர்கள்

(v) பெற்றோருடன் உடன்பிறந்தவர்கள்

(vi) உடன்பிறந்தவரின் மகன்மார் மற்றும் மகள்மார்

இந்த விதியில் ''உறவினர்'' என்பது இரத்த உறவினர்களே தவிர திருமண பந்தத்தால் வந்த உறவினர்கள் அல்லர் மற்றும் "பிள்ளைகள்" என்பதில் தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகளும் அடங்கும்.

(2) விதி 1க்கு உட்பட்ட கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள உறவினர்களின் எந்தவொரு குழுவிலும் ஒரே வயதில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் அல்லது வெவ்வேறு வயதுடைய சம உரிமைக்கு உரித்துக்கோரும் மற்றும் அடுத்து உரிமைபெறுவதற்கு தயாராக உள்ளவர்கள் இருந்தால், இந்த நபர்களிடமிருந்து காணியை அபிவிருத்தி செய்த நபர்களை அடுத்து உரிமைபெறுவதற்கான நபர்களாக பிரதேச செயலாளர் நியமிக்கலாம்:

ஆனால், ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களை பரிந்துரைக்கும்போது, அனுமதிப்பத்திரத்தில் அல்லது கொடைப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ள எந்தவொரு நிபந்தனைகளின்படி வாரிசுகள் பரிந்துரைக்கப்பட வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.